பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**29 05 2026** **7 15**

வெள்ளிக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. பழங்குடியின பாதுகாப்பு மன்ற பிரதிநிதிகளுடனான சந்திப்பு ஆக்கப்பூர்வமாக இருந்தது என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி குறிப்பிட்டுள்ளார்.

2. விளையாட்டுத் துறையை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் என்று உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தெரிவித்துள்ளார்.

3. பயரங்கரவாத செயல்களுக்கு எதிராக உறுதியான முடிவுகளை எடுக்க உலக நாடுகள் முன்வர வேண்டும் என்று தேசிய பாதுகாப்பு ஆலோசகர் திரு. அஜித் தோவல் வலியுறுத்தியுள்ளார்.

4. வடகிழக்கு மாநிலங்களின் பல்வேறு பகுதிகளில் இன்று கடும் வெப்ப அலை வீசக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

5. ஆசிய தடகள சாம்பியன்ஷிப் போட்டியில், மகளிர் 100 மீட்டர் ஓட்டத்தில் இந்தியாவின் Nipam வெண்கலப் பதக்கம் வென்றார்.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

பழங்குடியின பாதுகாப்பு மன்றத்தின் பிரதிநிதிகளுடனான சந்திப்பு ஆக்கப்பூர்வமாக இருந்தது என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பாக சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில் பழங்குடியின மக்களின் வாழ்வாதார மேம்பாட்டிற்காக அவர்களது அர்ப்பணிப்பு மிக்க சேவை பாராட்டத்தக்கது என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்த சந்திப்பின்போது பழங்குடியின சமுதாயத்தின் மேம்பாடு குறித்த பல்வேறு அம்சங்கள் விவாதிக்கப்பட்டதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

நாட்டில் விளையாட்டுத் துறையை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருவதாக உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், இந்தியாவில் உலகத் தரத்திலான விளையாட்டுக் கட்டமைப்புகள் விரிவுபடுத்தப்பட்டு வருவதாக குறிப்பிட்டுள்ளார்.

காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளை நடத்துவதற்கான தயார் நிலை குறித்து ஆய்வு செய்யப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

இதனைக் கருத்தில் கொண்டு உலகத் தரத்தில் விளையாட்டுப் போட்டிகளுக்கான கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டு வருவதாக திரு. அமித் ஷா தெரிவித்தார்.

<<<<>>>>

இந்தியா - சைப்ரஸ் இடையேயான பேச்சுவார்த்தைகள் ஆக்கப்பூர்வமாக இருந்தது என்று வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அந்த அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், மேற்காசியாவில் நிலவி வரும் பதற்றமான புவிசார் சூழலில் பரஸ்பரம் நலன் சார்ந்த அம்சங்கள் குறித்து விவாதிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே வெளியுறவு அமைச்சர் திரு. ஜெய்சங்கர், சவுதி அரேபிய இளவரசர் **Faisal Bin Farhan Bin Abdullah** மற்றும் யுக்ரைன் வெளியுறவு அமைச்சர் திரு. **Andril Sybiha** ஆகியோருடன் பரஸ்பரம்

இருதரப்பு உறவுகள் குறித்து விவாதிக்கப்பட்டதாக அந்த அமைச்சகத்தின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

<<<<>>>>

பயரங்கரவாத செயல்களுக்கு எதிராக உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற தேசிய பாதுகாப்பு ஆலோசகர் திரு. அஜித் தோவல் வலியுறுத்தியுள்ளார்.

ரஷ்ய தலைநகர் மாஸ்கோவில் நடைபெற்ற சர்வதேச பாதுகாப்பு மன்ற கூட்டத்தில் பேசிய அவர், பயங்கரவாதத்திற்கு எதிரான இரட்டை நிலைப்பாட்டை ஏற்றுக்கொள்ள முடியாது என்று கூறினார்.

சர்வதேச பாதுகாப்பு அச்சுறுத்தல்களை எதிர்கொள்ளும் வகையில் பாதுகாப்பு சார்ந்த கட்டமைப்புகள் மறுசீரமைக்கப்பட வேண்டியதன் அவசியத்தை அவர் எடுத்துரைத்தார்.

ஹோர்முஸ் மற்றும் செங்கடல் உட்பட சர்வதேச நீர்வழிப் பாதைகளில் தடையற்ற மற்றும் பாதுகாப்பான வர்த்தக் போக்குவரத்துகள் உறுதி செய்யப்பட வேண்டும் என்று திரு. அஜித் தோவல் வலியுறுத்தியுள்ளார்.

<<<<>>>>

குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் கர்நாடகா, கேரளம், கோவா மாநிலங்களுக்கு இன்று பயணம் மேற்கொள்கிறார்.

முதலாவதாக பெங்களூரு செல்லும் அவர், வாழும் கலையமைப்பின் 45வது ஆண்டு நிறைவு விழாவில் பங்கேற்கிறார்.

இதையடுத்து தாவனகரே-யில் உள்ள தனியார் பல்கலைக்கழகத்தின் பவளவிழா நிகழ்ச்சியிலும் அவர் பங்கேற்கிறார்.

பின்னர் கோவா செல்லும் குடியரசு துணைத்தலைவர், பனாஜியில் நடைபெறும் கோவா மாநிலம் உதய தின கொண்டாட்ட நிகழ்ச்சியிலும் பங்கேற்கிறார்.

இதையடுத்து கேரளம் செல்லும் அவர் கோட்டயத்தில் மலையாள நாளிதழின் 140வது நிறுவன தின நிகழ்ச்சியிலும் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் பங்கேற்கிறார்.

<<<<>>>>

இஸ்ரேல் நாட்டிற்கான விமானப் போக்குவரத்து சேவைகள் ஜூலை மாதம் இறுதி வரை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக ஏர் இந்தியா நிறுவனம் அறிவித்துள்ளது.

தில்லி - டெல் அவிவ் நகரங்களுக்கு இடையேயான விமானப் போக்குவரத்து சேவை ஏற்கனவே ஜூன் மாதம் வரை நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததை அந்நிறுவனத்தின் மூத்த அதிகாரி சுட்டிக்காட்டியுள்ளார்.

மேற்காசிவாயவில் தொடர்ந்து நிலவி வரும் பதற்றமான சூழல், விமான எரிபொருளின் விலை உயர்வு மற்றும் வான்வெளிக் கட்டுப்பாடுகள் போன்ற அம்சங்களைக் கருத்தில் கொண்டு இந்த முடிவு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக ஏர் இந்தியா நிறுவனம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

இஸ்ரேல் நாட்டிற்கான விமானப் போக்குவரத்து சேவைகள் ஜூலை மாதம் இறுதி வரை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக ஏர் இந்தியா நிறுவனம் அறிவித்துள்ளது.

தில்லி - டெல் அவிவ் நகரங்களுக்கு இடையேயான விமானப் போக்குவரத்து சேவை ஏற்கனவே ஜூன் மாதம் வரை நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததை அந்நிறுவனத்தின் மூத்த அதிகாரி சுட்டிக்காட்டியுள்ளார்.

மேற்காசிவாயவில் தொடர்ந்து நிலவி வரும் பதற்றமான சூழல், விமான எரிபொருளின் விலை உயர்வு மற்றும் வான்வெளிக் கட்டுப்பாடுகள் போன்ற அம்சங்களைக் கருத்தில் கொண்டு இந்த முடிவு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக ஏர் இந்தியா நிறுவனம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

இந்தியா - ஆஸ்திரேலியா நாடுகளிடையேயான ஒத்துழைப்பு வலுவடைந்து வருவதாக அந்நாட்டு பிரதமர் திரு அந்தோணி ஆல்பானிஸ் தெரிவித்துள்ளார்.

ஆஸ்திரேலியா நாடாளுமன்றத்தில் உரையாற்றிய, அவர், கலாச்சாரம், கல்வி, விளையாட்டு, வர்த்தகம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இரு நாடுகளுக்கும் இடையே நல்லுறவு உள்ளதாக கூறியுள்ளார்.

இந்தியாவின் பொருளாதார வளர்ச்சியை சுட்டிக்காட்டிய அவர், இரு நாடுகளுக்கும் இடையேயான வர்த்தக உறவுகள், பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் வர்த்தக ஒப்பந்தத்தின் மூலம் மேலும் வலுவடையும் என்று தெரிவித்துள்ளார்.

உலகில் மிகப்பெரிய மக்கள் தொகையைக் கொண்ட நாடாக இருந்த போதிலும், உலகின் மூன்றாவது பொருளாதார வளர்ச்சி கொண்ட நாடாக இந்தியா உருவெடுக்கும் என்று திரு ஆல்பானிஸ் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

பிரதமர் திரு. நரேந்திர மோடியின் அழைப்பின்பேரில் மியான்மர் அதிபர் திரு. **U Min Aung Hlaing** அரசு முறைப் பயணமாக இந்தியா வருகிறார்.

அவரது இந்தப் பயணத்தின்போது பிரதமர் திரு. நரேந்திர மோடியை சந்தித்து இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவது குறித்து பேச்சு நடத்துகிறார்.

இந்தப் பேச்சுவார்த்தையில் பல்வேறு துறைகளில் இரு நாடுகளும் இணைந்து செயல்படுவது குறித்தும் விவாதிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

பின்னர் மும்பை மற்றும் புத்தகயா போன்ற இடங்களுக்குச் சென்று மியான்மர் அதிபர் திரு. **U Min Aung Hliang** பார்வையிட உள்ளார்.

<<<<>>>>

இந்தியா - சிங்கப்பூர் இடையே பாதுகாப்புத்துறையில் ஒத்துழைப்புக்கான புதிய வாய்ப்புகள் உள்ளதாக மத்திய பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக அந்த அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், சிங்கப்பூரில் நடைபெற்ற பாதுகாப்பு ஒத்துழைப்பு குறித்த பேச்சுவார்த்தையில் பல்வேறு அம்சங்கள் குறித்து விவாதிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சைபர் பாதுகாப்பு, செயற்கை நுண்ணறிவு, கடல்சார் பாதுகாப்பு, ஆளில்லா விமானம் மற்றும் மேம்பட்ட பாதுகாப்பு தொழில்நுட்பங்களில் இரு நாடுகளும் இணைந்து செயல்படுவது குறித்தும் இதில் விவாதிக்கப்பட்டதாக அந்த செய்திக்குறிப்பு மேலும் தெரிவிக்கிறது.

மண்டல மற்றும் சர்வதேச அளவிலான பாதுகாப்பு சவால்களை எதிர்கொள்வதற்கான நடவடிக்கைகள் குறித்த அம்சங்களும் இந்தப் பேச்சுவார்த்தையில் இடம்பெற்றதாக பாதுகாப்பு அமைச்சகம் கூறியுள்ளது.

<<<<>>>>

பஞ்சாப் மாநில பிஜேபி கட்சித் தலைவராக திரு கேவல் குமார் சிங் தில்லான் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதனையடுத்து செய்தியாளர்களிடம் பேசிய அவர், இதற்காக அக்கட்சியின் தலைமைக்கு நன்றி தெரிவித்துக் கொள்வதாக கூறினார்.

அடுத்தாண்டு நடைபெறும் சட்டப்பேரவைத் தேர்தலில் பிஜேபி வெற்றி பெற்று ஆட்சி அமைக்கும் என்று திரு கேவல் குமார் சிங் தில்லான் நம்பிக்கை தெரிவித்தார்.

<<<<>>>>

வடகிழக்கு மாநிலங்களின் பல்வேறு பகுதிகளில் இன்று கடும் வெப்ப அலை வீசக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து ஆகாஷ்வாணி செய்திப்பிரிவுக்கு பேட்டியளித்த வானிலை மையத்தின் விஞ்ஞானி டாக்டர் அகில் ஸ்ரீவத்சவா இதனைத் தெரிவித்தார்.

பஞ்சாப், ஹரியானா, மத்தியப்பிரதேசம், உத்தரப்பிரதேசம் ஆகிய மாநிலங்களில் அடுத்த 3 நாட்களுக்கு படிப்படியாக வெப்பநிலை குறையும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

ஆசிய தடகள சாம்பியன்ஷிப் போட்டியில், மகளிர் **100** மீட்டர் ஓட்டத்தில் இந்தியாவின் **Nipam** வெண்கலப் பதக்கம் வென்றார்.

ஹாங்காங்கில் நடைபெற்ற **20** வயதுக்குட்பட்டோருக்கான தடகளப் போட்டியில் அவர் இந்த பதக்கத்தைக் கைப்பற்றினார்.

-----------

ஆசிய மல்யுத்த சாம்பியன்ஷிப் போட்டியின், **17** வயதுக்கு உட்பட்டோருக்கான பிரிவில், இந்தியாவின் **Sachin Kallappa Shirole, Rudra Kiran Nimhan** ஆகியோர் அரையிறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ளனர்.

வியட்நாமில் நடைபெற்று வரும் இப்போட்டியில், காலிறுதி ஆட்டத்தின் ஆடவர் **45** கிலோ எடைப் பிரிவில் **Sachin Kallappa Shirole,** ஜோர்டானின் **Sameen Ahmed Al-Obaid-**ஐ வென்றார்.

மற்றொரு காலிறுதி போட்டியில், ஆடவர் **110** கிலோ எடைப் பிரிவில் **Rudra Kiran Nimhan,** கொரியாவின் **Seok Moo Sim-**ஐ வென்றார்.

----------

இங்கிலாந்து அணிக்கு எதிரான முதலாவது மகளிர் டிவெண்ட்டி - டிவெண்ட்டி கிரிக்கெட் போட்டியில், இந்தியா **38** ரன் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

**Chelmsford**-ல் நடைபெற்ற இப்போட்டியில், முதலில் ஆடிய இந்திய அணி நிர்ணயிக்கப்பட்ட **20** ஓவரில் **7** விக்கெட் இழப்பிற்கு **188** ரன் எடுத்தது.

இதனையடுத்து **189** ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ஆடிய இங்கிலாந்து அணி **20** ஓவரில் **8** விக்கெட் இழப்பிற்கு **150** ரன் எடுத்தது.

மூன்று போட்டிகளைக் கொண்ட இந்த தொடரில், இந்தியா **1-0** என்ற ஆட்டக்கணக்கில் முன்னிலையில் உள்ளது.

-----------

ஐ. பி. எல். கிரிக்கெட் போட்டியில், இரண்டாவது தகுதிச்சுற்று ஆட்டத்தில் ராஜஸ்தான் அணி, குஜராத் அணியை எதிர்கொள்கிறது.

சண்டிகரில் இப்போட்டி இன்றிரவு **7.30** மணிக்குத் தொடங்குகிறது.

**<<<<The End>>>>**